அருள்மிகு ஸ்ரீவேதநாராயண பெருமாள் திருக்கோயில், ஸ்ரீரங்கம் ரெங்கநாத பெருமாள் திருக்கோயிலுக்கு முற்பட்ட கோயிலாகும். 4 வேதங்களையும் தலையணையாக வைத்துக்கொண்டு ஆதிசேஷன் மேல் பள்ளிகொண்டுள்ளார். இப்பெருமாள் கோயில் கல்விக்கு மிகப் பிரசித்தி பெற்ற கோயிலாகும். இக்கோயிலுக்கு குடமுழுக்கு விழா நடைபெற்று 17 ஆண்டுகளுக்கும் மேலாகிறது. எனவே, இக்கோயிலுக்கு குடமுழுக்கு விழா நடத்த அரசு ஆவன செய்யும் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக எனது சார்பாகவும், எனது தொகுதி மக்களின் சார்பாகவும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) நன்றி சொல்லிவிட்டார், சரி.*

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. (குறுக்கீடுகள்) உட்காருங்கள், நான் சொல்கிறேன்.

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. சிறப்புக் கவன ஈர்ப்பு

(அ) புதுடில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் சேலம் மாணவர் திரு. முத்துகிருஷ்ணன் மரணம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சிறப்புக் கவன ஈர்ப்பு. சேலத்தைச் சேர்ந்த புதுடில்லி பல்கலைக்கழக மாணவர் திரு. முத்துகிருஷ்ணன் மரணம் குறித்து மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன், மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன், மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன், மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன் ஆகியோர் பேரவை விதி 55–ன்கீழ்*

2017 மார்ச் 22] **[பேரவைத் தலைவர்]**

அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். திரு. இரா. இராஜேந்திரன் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன் அவர்கள்.

திரு. இரா. இராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலத்தைச் சேர்ந்த மாணவர் முத்துகிருஷ்ணன் Ph.D ஆய்வுப் படிப்பை புதுடில்லியில் இருக்கிற ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்திலே படிப்பவர். அவர் தற்கொலை செய்து கொண்டதாக செய்தி வந்தது. அந்தச் செய்தி மிகுந்த கவலை அளிக்கக்கூடிய செய்தியாக இருக்கிறது. இதில் அரசின் கவனத்தை ஈர்த்து, இந்தத் துயரச் செய்தி தமிழகத்திலே இருக்கிற அத்துணை மாணவச் சமுதாயத்திற்குமே கவலை அளிக்கக்கூடிய வகையிலே, அவர்களெல்லாம் அதிர்ச்சிக்கு ஆளாகக்கூடிய வகையிலே அமைந்திருக்கிறது. மாணவர் முத்துகிருஷ்ணன் அவர்கள், நண்பர் ஒருவர் வீட்டுக்கு உணவு சாப்பிடச் சென்றபோது அந்த நண்பரின் வீட்டு அறையிலேயே தற்கொலை செய்து கொண்டதாகத் தகவல். அந்தத் தகவலைக் கேட்ட மாணவர் முத்துகிருஷ்ணண் அவர்களுடைய தந்தை திரு. ஜீவானந்தம் அவர்கள், 'மாணவர் முத்துகிருஷ்ணன் என் பிள்ளை; தற்கொலை செய்துகொள்ளக்கூடிய அளவுக்கு கோழையானவர் அல்ல; இதில் ஏதோ மர்மம் இருக்கிறது. எனது மகன் தற்கொலை செய்துகொள்வதற்கான வாய்ப்பும் இல்லை' என்று தெரிவித்திருக்கிறார். அதைப்போல மாணவர் முத்துகிருஷ்ணன் அவர்கள் கடந்த காலத்திலே M.Phil படிப்பினை ஹைதராபாத்திலே உள்ள பல்கலைக்கழகத்திலே படித்துக்கொண்டிருந்தார். ஹைதராபாத் பல்கலைக்கழகத்திலே ரோஹித் வெமுலா என்ற மாணவர் தற்கொலை செய்துகொண்ட அந்த நிகழ்வை எதிர்த்து, கண்டித்து, குரல் எழுப்புகிற அந்த மாணவர் குழுவினரிடையே ஓர் உறுப்பினராக இருந்து அந்த மாணவரின் தற்கொலைக்கு நீதி கேட்டுப் போராடியிருக்கிறார். அந்த மாணவருக்காக நீதி கேட்டுப் போராடிய குழுவிலே இவரும் இடம்பெற்றிருந்த காரணத்தினால் புதுடில்லி, ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் படித்துக்கொண்டிருந்த மாணவர், குறைந்த வயதிலேயே தற்கொலை செய்து கொண்டிருக்கிறார் என்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாக இருந்து கொண்டிருக்கிறது. இந்த மாணவரின் மரணம் குறித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உடனடியாக மத்திய அரசுக்கு ஓர் அழுத்தம்*

கொடுத்திருக்கலாம். அதனையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-10

மாணவர் முத்துகிருஷ்ணன் மட்டுமல்ல, தமிழகத்திலிருந்து உயர் கல்வி படிப்பதற்காக புதுடில்லி செல்லக்கூடிய மாணவர்களுடைய பாதுகாப்பு கேள்விக்குறியாக இருக்கிறது. குறிப்பாக, தற்கொலை செய்துகொண்டதாகக் கூறப்படும் மாணவர் முத்துகிருஷ்ணன் 10—3—2017 அன்று அவருடைய முகநூல் பக்கத்தில் தனது ஆய்வு, அந்த ஆய்விலே நடத்தப்படும் நேர்காணல் உள்ளிட்ட அனைத்திலும் சமத்துவம் இல்லை என்று பதிவு செய்திருப்பது, தலித் மாணவர் முத்துகிருஷ்ணனுக்கு எத்தகைய பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதை அறிந்துகொள்ள முடிகிறது. அதைப்போல, மாணவர் முத்துகிருஷ்ணன் தற்கொலை செய்கிற அளவிற்கு, தூண்டுதலுக்கு ஆளாகியிருக்கிறார் என்கிற ஒரு தகவலும் வந்திருக்கிறது. தற்கொலை செய்துகொள்வதற்கான தூண்டுதல் நடந்திருக்கிறது; அதைப்போல வன்கொடுமை தடுப்புச் சட்டப் பிரிவுகளிலே புதுடில்லி போலீசார் வழக்கு பதிவு செய்திருக்கிறார்கள். புதுடில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்திலே முத்துகிருஷ்ணன் சந்தித்த ஏற்றத்தாழ்வு, ஜாதிப் பிரச்சினைகள் குறித்து புதுடில்லி போலீசார் நிச்சயமாக விசாரிப்பார்கள் என்கிற நம்பிக்கையும் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது.

இதுபோன்ற சம்பவம், இதற்கு முன்பும் நடந்திருக்கிறது. திருப்பூரைச் சேர்ந்த சரவணன் என்கிற மாணவர் புதுடில்லியில் இருக்கிற AIIMS மருத்துவமனை மருத்துவக் கல்லூரியில் 10—7—2016 அன்று மர்மமான முறையிலே தற்கொலை செய்துகொண்டிருக்கிறார். அந்த மாணவர் தற்கொலை செய்து கொண்டதைக் கண்டித்து தமிழகத்தில் இருக்கிற திராவிட முன்னேற்றக் கழக எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு தளபதி அவர்கள் உள்ளிட்ட அனைத்துக் கட்சித் தலைவர்களுமே, சி.பி.ஐ. விசாரணை வேண்டுமென்று தொடர்ந்து கோரிக்கை வைத்தார்கள். அந்த மாணவருடைய பிரேதப் பரிசோதனைக்குப் பிறகு 'அந்த மாணவர் தற்கொலை செய்துகொள்ளவில்லை; அவர் கொலை செய்யப்பட்டிருக்கிறார்' என்பது உறுதி செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, பிரேதப் பரிசோதனையில் அது கொலை என்பது உறுதியாகியிருக்கிறது. மாணவர் சரவணன் மரணத்தில், ஐந்து மாதங்களுக்குப் பிறகு

2017 மார்ச் 22] **[திரு. இரா. இராஜேந்திரன்]**

கொலை வழக்காக புதுடில்லி போலீசார் இப்போது பதிவு செய்திருக்கிறார்கள். அந்தக் கொலை வழக்கின் அடுத்த கட்ட விசாரணை என்னவென்றே இதுவரை வெளி உலகத்திற்கு தெரியாத ஒரு நிலை இருந்து கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், சுருக்கமாகப் பேசி முடியுங்கள், இன்னும் நிறைய subjects இருக்கின்றன. சீக்கிரம் உரையை முடியுங்கள்.*

திரு. இரா. இராஜேந்திரன்: *மருத்துவ மாணவர் சரவணன் கொலைக்குக் காரணமானவர்கள் யார் என்பது கண்டுபிடிக்கப்படவில்லை. அந்தக் கொலை சம்பவத்தால் ஏற்பட்டுள்ள பீதி தமிழக மாணவர்கள் மனதிலிருந்து மறைவதற்குள் தமிழகத்தைச் சேர்ந்த இன்னொரு மாணவர் முத்துகிருஷ்ணன் தற்கொலை செய்துகொண்டார் என்று மீண்டும் புதுடில்லி போலீசார் கூறுகிறார்கள். இந்த வழக்கிலே தீவிர புலன் விசாரணை செய்து, தற்கொலையாக இருந்தாலும், அதற்கு யார் காரணம் என்பதைக் கண்டுபிடித்து, உண்மையான குற்றவாளிகள் சட்டத்தின்முன் நிறுத்தப்பட வேண்டும். திருப்பூர் மாணவர் சரவணன், சேலம் தலித் மாணவர் முத்துகிருஷ்ணன் ஆகியோரின். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், சீக்கிரம் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) போதும், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். நீங்கள் உரையை முடிக்க மாட்டேன் என்கிறீர்களே? பொதுவாக, சிறப்புக் கவன ஈர்ப்பின்போது அமைச்சருடைய கவனத்தை ஈர்த்துத்தான் அமர வேண்டும். நீங்கள் பெரிய விவாதமே நடத்துகிறீர்களே? (குறுக்கீடு) உட்காருங்கள். உங்களுடைய கருத்தைத்தான் சொல்லிவிட்டீர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லவிருக்கிறார்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) சுருக்கமாகச் சொல்லி உரையை முடியுங்கள்.*

திரு. இரா. இராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைச் சேர்ந்த மாணவர் சரவணன் புதுடில்லியிலே கொலை செய்யப்பட்டிருக்கிறார் என்கிற தகவல் உறுதியாகியிருக்கிறது. அதே நேரத்திலே இப்போது மாணவர் முத்துகிருஷ்ணனும் தற்கொலை செய்துகொண்டதாகக் கூறியிருக்கிறார்கள். இதிலும் சந்தேகம் இருக்கிறது. ஆக*

தமிழகத்திலிருந்து செல்கிற மாணவர்களுக்கு பாதுகாப்பு இல்லாத நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆக, நமது மாணவர்களுக்கு பாதுகாப்பு தருவதற்கு தமிழக அரசு உறுதி செய்ய வேண்டும். அண்டை மாநிலங்களுக்குச் செல்கிற மாணவர்களின் விவரங்கள், அவர்கள் தங்கியிருக்கும் முகவரி அடங்கிய விவரங்கள் கொண்ட data base ஒன்று உருவாக்கப்பட வேண்டும். வெளி மாநிலங்களுக்கு கல்வி பயிலச் செல்கிற மாணவர்களின். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். போதும், உட்காருங்கள். (குறுக்கீடு) வாய்ப்பு இல்லை, உட்காருங்கள். அது குறித்தெல்லாம் அவர் கேட்டுவிட்டார். உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) ஒரே கோரிக்கையை எத்தனை முறை சொல்வீர்கள்? 3, 4 முறை அதே கோரிக்கையைச் சொல்லிவிட்டீர்கள். எனக்கு ஒத்துழைப்பு கொடுங்கள். (குறுக்கீடு) இது மாதிரி பேசினால், நான் அவையை எப்படி நடத்துவது? சரி, சொல்லுங்கள்.

திரு. இரா. இராஜேந்திரன்: மாணவர் முத்துகிருஷ்ணன் மரணம் குறித்து சி.பி.ஐ. விசாரணை நடத்த வேண்டும், உண்மையை உலகிற்கு தெரியப்படுத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

திரு. இரா. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு நிமிடம் இருங்கள். அந்த மாணவரின் குடும்பத்தினருக்கு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இராஜேந்திரன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. இராஜேந்திரன், நீங்கள் பேசுவது எதுவும் அவைக் குறிப்பில் பதிவாகாது. உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, உங்கள் உறுப்பினர் பேசுவதற்கு போதிய நேரம் கொடுத்தேன். ஆனால், அவர் அந்த அவகாசத்தில் சொல்லாமல், கடைசியாக என்னையே இருங்கள் என்று சொல்கிறார். என்னை இருங்கள் என்று சொல்வதற்கெல்லாம் உங்களுக்கு* rights *கிடையாது. உட்காருங்கள்.* (குறுக்கீடு) *பேரவைத் தலைவர் சொல்வதுதான் இறுதி முடிவு.* (குறுக்கீடு) *உட்காருங்கள்.* (குறுக்கீடு) *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய உறுப்பினர் திரு. இராஜேந்திரன் அவர்கள் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டுவந்து, நீங்கள் வருத்தப்படக்கூடிய அளவிற்கு அல்லது நேரத்தை எடுத்துக்கொள்ளக்கூடிய அளவிற்கு, தன்னுடைய உரையை அமைத்துக் கொண்டார். நானும் அதை ஏற்றுக்கொள்கிறேன். இருந்தாலும், முதலமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்கின்ற காரணத்தால், இது ஒரு மாணவருடைய முக்கியமான பிரச்சினை. எனவே, நான் சுருக்கமாக ஒரே வரியில் சொல்ல விரும்புவது, அவர்* CBI *விசாரணை வேண்டுமென்று கேட்டிருக்கிறார்.* CBI *விசாரணை மட்டுமல்ல, தமிழகத்திலிருந்து உயர் கல்விக்காக பல மாநிலங்களுக்கு, அதிலும் குறிப்பாக, தலைநகரமாக இருக்கின்ற புதுடில்லிக்குச் செல்கின்ற இடத்தில் இப்படிப்பட்ட ஒரு நிலை இருக்கிறது என்று சொன்னால், ஒட்டுமொத்தமாக மாணவர்களுக்கு பாதுகாப்பு இல்லாத ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறது. எனவே, நம்முடைய அரசு, அதாவது, உயர் காவல் துறை அதிகாரிகள் மற்றும் உயர் கல்வித் துறை அதிகாரிகள் கொண்ட ஒரு குழுவை அமைத்து, மாணவர்களுக்கு உரிய பாதுகாப்பை உறுதி செய்யக்கூடிய வகையில் அதைத் தொடர்ந்து கண்காணிக்க வேண்டுமென்ற வேண்டுகோளையும் மற்றும் எங்களுடைய உறுப்பினர் திரு. இராஜேந்திரன் எடுத்த வைத்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தோடு இதற்கும் சேர்த்து நம்முடைய முதலமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்ல வேண்டுமென்று நான் கேட்டு அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனிதராய்ப் பிறப்பது பெரிதல்ல,*

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [*2017 மார்ச் 22*

பிறப்பிலே ஒரு சிறப்பு வேண்டும். வளர்வது பெரிதல்ல, நல்ல ஞானத்தோடு வளர வேண்டும். சாதிப்பது பெரிதல்ல, சாதனைகள் சரித்திரத்தில் இடம் பெற வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) *அந்த வகையில், பிறப்பிலே சரித்திரச் சாதனைக்கு சொந்தக்காரர் ஒருவர் உண்டு என்றால், அதுதான் அகிலம் போற்றும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள்.* (மேசையைத் தட்டும் ஒலி) *இனம் காத்து, மொழி காத்து, நதி காத்து, சமூக நீதி காத்து, எளியவர், வறியவர் உயிர் காத்து, பெண் இனத்திற்கு பெருமை காத்து,* (மேசையைத் தட்டும் ஒலி) *கால் பதித்த இடமெல்லாம் வரலாற்றுச் சுவடுகளாய்ப் பதித்து, எட்டு திசையிலும் வாழும் 8½ கோடி தமிழர்களின் இதய தெய்வம், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்னும்* (மேசையைத் தட்டும் ஒலி) *ஆல மரத்தினைத் தாங்குகின்ற வேராகி, தமிழகத்தின் தலை மகளாய், முதல்வராய் 'மக்களால் நான் மக்களுக்காகவே நான்' என தவ வாழ்வு வாழ்ந்து,* (மேசையைத் தட்டும் ஒலி) *இன்றைக்கு வங்கக் கடலோரம் தெய்வமாய் நின்று நம்மை வழிநடத்தும் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிந்து வணங்குகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நல்ல வாய்ப்பினை உருவாக்கித் தந்த கழகப் பொதுச் செயலாளர், பெருமதிப்பிற்குரிய சின்னம்மா அவர்களையும் வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுடில்லியில் உள்ள ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் Ph.D., ஆராய்ச்சிப் படிப்பு மாணவரான சேலம் மாவட்டம், அரிசிபாளையத்தைச் சேர்ந்த திரு. ஜீவானந்தம் என்பவரின் மகன் திரு. முத்துகிருஷ்ணன் 13–3–2017 அன்று இறந்துள்ளார் என்ற செய்தியை அறிந்தவுடன், துயரமுற்று அவருடைய குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்தேன்.

புதுடில்லியில் வசந்தவிஹார் காவல் நிலையத்தில் முத்துகிருஷ்ணன் இறந்தது தொடர்பாக குற்ற எண் 120/2017, இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு 306 மற்றும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்புச் சட்டப் பிரிவு 3(1)(x)–ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டு, எய்ம்ஸ் மருத்துவமனையில் 5 மருத்துவர்கள் அடங்கிய குழுவினரால் பிரேதப் பரிசோதனை செய்யப்பட்டு, மறைந்த

2017 மார்ச் 22] **[திரு. எடப்பாடி கே. பழனிசாமி]**

திரு. முத்துகிருஷ்ணன் தந்தை திரு. ஜீவானந்தம் அவர்களிடம் அவரது உடல் ஒப்படைக்கப்பட்டது. திரு. முத்துகிருஷ்ணன் அவர்களுடைய உடலை அவருடைய சொந்த ஊருக்குக் கொண்டு செல்வதற்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்யுமாறு தமிழக அரசு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருந்தேன். அதன்படி, மறைந்த திரு. முத்துகிருஷ்ணன் அவர்களின் உடலை, அவருடைய சொந்த ஊருக்குக் கொண்டு வருவதற்கு தமிழ்நாடு அரசால் அனைத்து உதவிகளும் செய்யப்பட்டன.

முற்பகல் 11-20

மறைந்த திரு. முத்துகிருஷ்ணன் அவர்களின் குடும்பச் சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து அவருடைய குடும்பத்திற்கு 3 இலட்சம் ரூபாய் வழங்க ஆணையிட்டேன். (மேசையைத் தட்டும் ஒலி) மதிப்பிற்குரிய மக்களவை உறுப்பினர் திரு. பன்னீர்செல்வம் அவர்கள் மற்றும் சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர் மறைந்த திரு. முத்துகிருஷ்ணன் உடலுக்கு மரியாதை செலுத்தி, தமிழக அரசின் சார்பாக அறிவிக்கப்பட்ட நிவாரணத் தொகை 3 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை அவருடைய பெற்றோரிடம் வழங்கினர். திரு. முத்துகிருஷ்ணன் இறப்பு தொடர்பான வழக்கு புதுடில்லியிலுள்ள வசந்தவிஹார் காவல் நிலையத்தில் விசாரிக்கப்பட்டு வருகிறது. மத்திய தரைவழிப் போக்குவரத்துத் துறை இணை அமைச்சர் மாண்புமிகு திரு. பொன். ராதாகிருஷ்ணன் அவர்கள் மறைந்த திரு. முத்துகிருஷ்ணன் உடலுக்கு சேலத்தில் உள்ள அவருடைய வீட்டுக்குச் சென்று மரியாதை செலுத்தினார் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வெளி மாநிலங்களுக்குச் சென்று உயர் கல்வி படிக்கின்ற மாணவர்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று இங்கே கருத்துகளைத் தெரிவித்திருக்கின்றார்கள். இந்த அரசு வெளிமாநிலத்திற்குச் சென்று உயர் கல்வி படிக்கும் மாணவர்களுக்கு உரிய பாதுகாப்பு ஏற்பாட்டைச் செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் திரு. டி. செங்குட்டுவன், திரு. எம். இராமச்சந்திரன், திரு. க. அன்பழகன் ஆகியோர் எழுந்து நின்றனர்.)

[2017 மார்ச் 22

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. செங்குட்டுவன், உட்காருங்கள். இன்றைக்கு நிறைய அலுவல்கள் எடுத்துக்கொள்ள வேண்டியதிருக்கிறது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. அன்பழகன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுவதெல்லாம் எதுவும்* record *ஆகாது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் குறிப்பிடும் பிரச்சினையை, நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறேன். அதன்பின்னரும் நீங்கள் எழுந்து கேட்டால் எப்படி? நீங்கள் இன்று காலையில் கொண்டுவந்து கொடுத்துவிட்டு, இவ்வாறு எல்லாம் அவையில்* raise *செய்தால் எப்படி? திரு. செங்குட்டுவன், இன்று காலையில் கொடுத்துவிட்டு* raise *செய்தால் எப்படி? அதை நாளைக்கு பார்க்கிறேன் என்று நான் உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன். நீங்கள் இவ்வாறு* raise *செய்வது முறையல்ல. அவை விதிகளுக்கு முரணாக உங்கள் பணி இருக்கிறது, உட்காருங்கள்.*

(ஆ) குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தமிழகத்தில் நிலவும் குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது குறித்து மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. அர. சக்கரபாணி, திரு. கு. பிச்சாண்டி, திரு. இ. பெரியசாமி, திரு. கே.ஆர். பெரியகருப்பன், முனைவர் க. பொன்முடி, திரு. டி.ஆர்.பி. ராஜா, திரு. க. அன்பழகன், திரு. டி. செங்குட்டுவன், திரு. ஐ.பி. செந்தில்குமார், டாக்டர் (திருமதி) பூங்கோதை, திரு. துரை. கி. சரவணன், டாக்டர் ஆர்.டி. அரசு, திரு. ஒய். பிரகாஷ், திரு. பி. முருகன், திரு. எம். இராமச்சந்திரன், திரு. மா. சுப்பிரமணியன், திரு. துரை. சந்திரசேகரன், திரு. எஸ். அரவிந்த் ரமேஷ், திரு. எ.வ. வேலு, திரு. அ. சௌந்தரபாண்டியன், திரு. நா. கார்த்திக் ஆகியோர் விதி 55–ன்கீழ் அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். இதனை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள் இதுகுறித்து மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.*